# செய்தி வெளியீடு

தமிழகத்தில் உள்ள மலைப்பகுதிகள் உட்பட அனைத்துப் பகுதிகளிலும் வசிக்கும் மக்கள் நோயற்ற வாழ்க்கை வாழ, ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் மருத்துவமனைகள் அமைப்பது மற்றும் மேம்படுத்துவது ஆகிய நடவடிக்கைகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அரசு எடுத்து வருகிறது.

மக்களுக்கு தரமான மருத்துவ சேவை வழங்கும் வகையில், தமிழகத்திலுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்கள் படிப்படியாக 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக தரம் உயர்த்தப்பட்டு வருகின்றன. அந்த வகையில் இந்த ஆண்டு மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்கள் இல்லாத வட்டாரங்களில் உள்ள 20 ஆரம்ப சுகாதார நிலையங்களை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக தரம் உயர்த்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அரசு முடிவெடுத்துள்ளது.

தரம் உயர்த்தப்பட்ட மருத்துவமனையில் பணியாற்றுவதற்காக, ஒவ்வொரு மருத்துவமனைக்கும் 3 மருத்துவ அதிகாரி, 1 செவிலியர், 1 ரேடியோகிராபர், 1 ஆண் மருத்துவமனை பணியாளர், 1 பெண் மருத்துவமனை பணியாளர், 1 சுகாதார பணியாளர் என 8 பணியிடங்களை தோற்றுவிப்பதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இதற்கான பணிகளுக்காக அரசுக்கு 18 கோடி ரூபாய் செலவினம் ஏற்படும்.

அதேபோன்று, தமிழகத்திலுள்ள 9 மாநகராட்சிகளில், ஒவ்வொரு மாநகராட்சியிலும் மண்டலத்திற்கு ஒன்று என்ற வகையில் நான்கு நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் அதாவது 36 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களை 24x7 மையங்களாக தரம் உயர்த்தப்படுவதற்கும், தரம் உயர்த்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஒவ்வொன்றுக்கும் கூடுதலாக 3 செவிலியர் பதவி என 36 மையங்களுக்கு 108 செவிலியர் பதவிகள் உருவாக்குவதற்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

மேலும், பல்லாவரம், தாம்பரம், ஆவடி, கடலூர், திருவண்ணாமலை, பொள்ளாச்சி, தஞ்சாவூர், கும்பகோணம், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, திண்டுக்கல், நாகர்கோவில் மற்றும் ராஜபாளையம் ஆகிய 13 நகராட்சிகள் ஒவ்வொன்றிலும் தற்பொழுது இயங்கி வருகின்ற சுகாதார மையங்களில் ஒரு சுகாதார மையத்தினை 24x7 மையமாக மாற்றுவதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இந்த 13 மையங்களில் பணியாற்றுவதற்காக ஒரு மையங்களில் 3 செவிலியர் பணியிடம் வீதம் 39 செவிலியர் பணியிடங்களை தோற்றுவிக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

தரம் உயர்த்தப்பட்ட மறைமலை நகர், அனகாபுத்தூர், ஜோலார்பேட்டை, மேல்விஷாரம், அம்பாசமுத்திரம், விக்ரமசிங்கபுரம், திருத்தங்கல், வால்பாறை, புஞ்சைபுளியம்பட்டி, வெள்ளக்கோவில், துவாக்குடி, கூடலூர் (தேனி) ஆகிய 12 நகராட்சிகளில், ஒரு நகராட்சிக்கு ஒரு நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் என 12 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் தொடங்குவதற்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

இந்த 12 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணியாற்றுவதற்காக ஒவ்வொரு நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும், 1 மருத்துவர், 1 மருந்தாளுநர், 1 ஆய்வக தொழில் நுட்பாளர், 4 பெண் நல்வாழ்வு பணியாளர்கள்/ANM, மருத்துவமனை பணியாளர் மற்றும் 1 சுகாதார பணியாளர் என 108 பணியிடங்கள் தோற்றுவிப்பதற்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

மேலும், புற்றுநோய்களுக்கு சிறப்பு மருத்துவ சிகிச்சைகளுக்கான தேவைகள் அதிகரித்துள்ளதை கருத்தில் கொண்டு, மத்திய அரசும் மாநில அரசும் இணைந்து செயல்படுத்தும் தேசிய புற்றுநோய், நீரிழிவு, இதயநோய்கள் (Cardio Vascular diseases) தடுப்புத் திட்டத்தின் கீழ், சென்னை அரசு பொது மருத்துவமனைக்கு மருத்துவ உபகரணங்கள் வாங்குவதற்கும், கட்டடம் கட்டுவதற்கும் மாநில அரசின் பங்களிப்பான 1 கோடியே 20 லட்சம் ரூபாய் நிதியினை விடுவித்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்,

சென்னை அடையாறு புற்றுநோய் மருத்துவமனை மற்றும் மருந்தகத்திற்கு 1992-93 ஆம் ஆண்டு, ஆண்டு பராமரிப்பு மானியம் 20 லட்சமாக உயர்த்தப்பட்டு, பின்னர் வருடத்திற்கு 10 விழுக்காடு என பராமரிப்பு மானியம் உயர்த்தப்படும் என ஆணை வெளியிடப்பட்டது. தற்பொழுது அடையாறு புற்று நோய் மருத்துவமனயில் சிகிச்சைக்காக வரும் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதைக் கருத்தில் கொண்டு, 2012-13 ஆம் ஆண்டுக்கான பராமரிப்பு மானியத்தை 1 கோடியே 75 லட்சம் ரூபாய் என உயர்த்தி வழங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். மேலும் ஆண்டு பராமரிப்பு மானியத்தை, ஆண்டுதோறும் 10 விழுக்காடு உயர்த்தி வழங்கவும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

தமிழக மக்கள் அனைவருக்கும் தரமான மருத்துவச் சேவை வழங்கும் நோக்கத்தை எட்டக் கூடிய வகையில், முதலமைச்சரின் விரிவான காப்பீட்டுத் திட்டம் 11.1.2012 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த திட்டம் பின்னர் தமிழகத்தில் அகதிகள் முகாம்களில் வசிக்கும் இலங்கை தமிழகர்கள் அனைவருக்கும் மற்றும் உழவர் பாதுகாப்புத் திட்டத்தில் உறுப்பினர்களாக உள்ளவர்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டது.

மாற்றுத் திறனாளிகளின் நலனுக்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வரும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், தற்பொழுது, குடும்பத்தில் ஒருவர் மாற்றுத்திறனாளியாக இருந்தாலும், அக்குடும்பத்திற்கு வருமான வரம்பின்றி முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் பயனாளியாக சேர்க்க உத்தரவிட்டுள்ளார்கள்.

மருத்துவர்கள் மற்றும் மருத்துவம் சார்ந்த பணியாளர்கள் ஓய்வு பெறுவதாலோ அல்லது பணியை விட்டு நீங்குவதாலோ ஏற்படும் காலி இடங்கள் மற்றும் புதியதாக தோற்றுவிக்கப்பட்ட பணியிடங்கள் ஆகியவை உடனுக்குடன் நிரப்பப்பட வேண்டியது மிகவும் அவசியம். இதனைக் கருத்தில் கொண்டு, இந்தியாவிலேயே முதல் முறையாக மருத்துவத் துறை பணியாளர்களைத் தேர்வு செய்வதற்கு என்று மருத்துவ துறை பணியாளர் தேர்வு வாரியம் ஒன்றினை தோற்றுவிக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஏற்கெனவே உத்தரவிட்டுள்ளார்கள். இந்த வாரியத்தின் மூலம் தற்பொழுது நிரப்பப்படாமல் உள்ள 2,159 மருத்துவர்கள் பணியிடங்கள் விரைவில் நிரப்ப நடவடிக்கை எடுக்குமாறு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

அரசின் இந்த நடவடிக்கைகள் மூலம் பொது மக்களுக்கு தொடர்ந்து தரமான மருத்துவ சேவை கிடைப்பதற்கு வழிவகை ஏற்படும்.

*******

வெளியீடு:- இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9
நாள்:- 28.1.2013.